# திருக்கடித்தானம் - ஆழ்வார்கள் அனுபவம்

(மலையாள நாட்டு திவ்யதேசம்)




ஆசிரியர்:

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாச்சாரி சடகோபன்



நன்றி:

1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நாராயணன் ஸ்வாமி - தமிழ் மற்றும் ஸம்ஸ்க்ருத தட்டச்சு உதவி

2. www.srivaishnavam.com, pbase, www.anudinam.org - படங்கள் உதவி

3. ஸ்ரீமதி சாரதா ஸ்ரீநிவாஸன் - மின்புத்தகத் தொகுப்பு





# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் முன்னுரை | 1 |
| திருக்கடித்தானம்  திவ்ய தேசம் | 3 - 8 |






அற்புத (அத்புத) நாராயணன் (Courtesy: srivaishnavam.com )



ஸ்ரீ:

# திருக்கடித்தானம் - ஆழ்வார்கள் அனுபவம்

## ( மலையாள நாட்டு திவ்யதேசம்)

******

ஜய வருஷம் – பங்குனி மாதம் – சுக்ல நவமி திதி - April 8th, 2013

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம். பரமபவித்ரனான ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி அவதரித்த புண்ய தினமான இந்த ஸ்ரீராம நவமியில் அடியேனுடய ஸமர்ப்பணமாக இந்த மின் - புஸ்தகத்தை வெளியிடுவதை அடியேனின் பாக்கியமாக கருதுகிறேன்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த போது 1992 செப்டம்பர் தொடங்கி மார்ச் 1993 வரை வேலை நிமித்தமாக பல வெளிநாடுகளுக்கு ப்ரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் பகவத் சிந்தனை விடாமலிருக்க 108 திவ்ய தேசங்களைப்பற்றியும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பற்றியும், வேத வேதாந்தங்களைப் பற்றியும் ஏற்பட்ட எண்ணங்களின் கருத்து-கோவையை ஒரு நூல் வடிவமாக எழுதியது நேற்று நடந்தது போல் பசுமையாக நினைவில் நிற்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக, மலையாள நாட்டு திவ்ய தேசமான திருக்கடித்தானம் பற்றி ஆழ்வார்களின் மங்களாசாஸனங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரி சடகோபன்





அற்புத (அத்புத) நாராயணன் (Courtesy: srivaishnavam.com )



ஸ்ரீ:

# திருக்கடித்தானம் - ஆழ்வார்கள் அநுபவம்

( மலையாள நாட்டு திவ்யதேசம்)

**ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்**

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )

******

மலைநாட்டு திருப்பதிகள்: திருக்கடித்தானம்

அம்பலப்புழாவிலிருந்து 23 மைல் தூரத்தில் உள்ள இத்திருப்பதியில், அற்புத (அத்புத) நாராயணன் என்ற பெருமாள் கற்பகவல்லி தாயாருடன், புண்யகோடி விமான நிழலில் நின்ற திருக்கோலத்தில் ஸேவை தருகிறான்.

திருக்கடித்தானம் என்ற திருப்பதியில், கைங்கர்யஸ்ரீ மிகுந்த மஹான்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்ளும் "அல்லியந்தண்ணந்துழாய் முடி அப்பன்" அந்த திருப்பதியில் தனக்காக எழுந்தருளியுள்ளான். இரவும் (எல்லியும்), பகலும் (காலையும்) தன்னையே நினைந்து நிற்கும் தொல் அருளை தகுதியில்லாத எனக்கு அளித்தான் என முதல் பாசுரத்தில் நம்மாழ்வார் பின் வருமாறு சொன்னர்:

எல்லியும் காலையும் தன்னை நினைந்தெழ,

நல்ல அருள்கள் நமக்கே தந்தருள்செய்வான்,

அல்லியந் தண்ணந்துழாய் முடியப்பனூர்,

செல்வர்கள் வாழும் திருக்கடித்தானமே.

இது வரையில் எனக்கு பல அருள்கள் செய்த அத்புத நாராயணன், இனி என் திருவாய்மொழியை ஓதி, வாசிக கைங்கர்யம் செய்யப் போகும் செல்வர்களுக்கு தர்சனம் அளிக்கப் போகிறான். அதற்காக, இங்கு முன்னதாகவே வந்து நிற்கிறான் என ஆழ்வார் சொன்னார்.

இரண்டாவது பாசுரத்தில், திருக்கடித்தானத்திற்கு அம்ருத நாராயணன் வந்தடைந்த காரணத்தை ஆழ்வார் விளக்கினார். என் சிந்தையில் கோயில் கொள்ளவே, அவன் திருக்கடித்தானம் சேர்ந்தான் எனப் பின் வருமாறு கூறினார்:



திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும்,

ஒருக்கடுத்துள்ளே உறையும் பிரான் கண்டீர்,

செருக்கடுத்தன்று திகைத்த அரக்கரை,

உருக்கெட வாளி பொழிந்த ஒருவனே.

என் சிந்தையிலும், திருக்கடித்தானத்திலும் ஒருங்கே நித்ய வாஸம் செய்யும் அத்புத நாராயணன், அன்று ஒரு நாள், போர் புரிய துடித்து நின்ற இராவணின் மூல பலத்தை தன் அம்புகளால் சின்னா பின்னமாக்கிய ஸ்ரீ ராமசந்த்ரனே என ஆழ்வார் அறிவித்தார்.




வடவூர் ராமர் (Courtesy: pbase )

தனது நாயகியான ஸீதா பிராட்டியை தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்காக தன் கோதண்டம் என்ற வில்லை வளைத்து, பர பரப்புடன் அம்புகளை தொடுத்து மஹா வேகத்துடன் இங்குமங்கும் சுற்றி தேஜோராசியாகத் தோன்றிய “திரு அமர் மார்வன்” தான் திருக்கடித்தானத்தில் நின்று, நான் நினைக்கும் போதெல்லாம் தித்திக்கும் வஸ்துவாக



இருக்கிறான் என ஆழ்வார் பின் வருமாறு சொன்னார்:

ஒருவரிருவரோர் மூவரென நின்று,

உருவு கரந்துள்ளுந்தோறும் தித்திப்பான்,

திருவமர் மார்வன் திருக்கடித்தானத்தை,

மருவியுறைகின்ற மாயப்பிரானே.

மண்டலாகாரமாக ஸ்ரீ ராமசந்த்ரன் யுத்த களத்தில் சுற்றும் போது, அவன் ஒருவன் தானா அல்லது இரண்டு பேரா அல்லது மூன்று பேரா என்று அறிய முடியாத ஒளிப் பிழம்பாக விளங்கினான் என்று ஆழ்வார் சொன்னார்.

நான்காவது பாசுரத்தில், அத்புத நாராயணன், என்னுடைய கொடிய வினைகள் எல்லாம் தொலையுமாறு, என்னிடம் வாத்ஸல்யத்துடன் வந்து, என் நெஞ்சை தன் இருப்பிடமாகக் கொண்டு நிலைத்துள்ளான் எனச் சொன்னார். "மாயப்பிரானென் வல்வினை மாய்ந்தற, நேசத்தினால் நெஞ்சம் நாடு குடி கொண்டான்" என ஆழ்வார் விளக்கினார்.

ஐந்தாவது பாசுரம் பின் வரும் அழகிய வாக்யங்களை உடையது:

**கோயில்** கொண்டான்றன் திருக்கடித்தானத்தை,

**கோயில்** கொண்டானதனோடு மென்னெஞ்சகம்,

**கோயில்**கொள் தெய்வமெல்லாம் தொழ, வைகுந்தம்

**கோயில்**கொண்ட குடக் கூத்தவம்மானே.

" வைகுந்தம்கோயில்கொண்ட குடக் கூத்தவம்மான்" என்று சொல்லும் பொது வைகுந்தமே விசேஷ வாஸ ஸ்தலம் என்று நினைத்தவன், வட மதுரையில் பிறந்து, ஆய்பாடி சேர்ந்து, கோபர்களுடன் கலந்து குடக் கூத்தாடினான் என்பதை விவரித்தார். ஆய்பாடியில் ஸ்திர வாஸம் செய்வது சரியல்ல என நினைத்து, நித்ய வாஸம் செய்ய திருக்கடித்தானத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டான். அது மாத்திரம் போதாது என்று, எனது நெஞ்சையும் தான் நித்ய வாஸம் செய்யும் கோயிலாக ஏற்றுக் கொண்டான் என்று ஆழ்வார் மேற் காணும் பாசுரத்தில் கூறினார்.

என் நெஞ்சிலும், திருக்கடித்தானத்திலும் உறைந்துள்ள மாயக் கூத்தனான அத்புத நாராயணனை நீங்களும் துதித்தீர்களானால், உங்கள் துக்கங்கள் எல்லாம் அறவே ஒழியும்





என ஆழ்வார் பின் வருமாறு தெரிவித்தார்:

கூத்தவம்மான் கொடியேனிடர் முற்றவும்,

மாய்த்தவம்மான் மதுசூத வம்மானுறை,

பூத்த பொழில் தண் திருக்கடித்தானத்தை,

ஏத்த நில்லா குறிக்கொண்மின் இடரே.

அத்புத நாராயணன், “கொடியேன் இடர் முற்றவும் மாய்த்த அம்மான்” என ஆழ்வார் சொன்னார். மஹா பாவியான எனது துக்கங்கள் எல்லாம் அழிக்கக் கூடிய பராக்கிரமம் கொண்ட மதுசூதன் அம்மான் திருக்கடித்தானத்தில் நிற்கிறான். எனது இடர்களை அவன் விலக்கினதை கண்ட பிறகு, உங்கள் வினைகளும் அழியும் என்பதில் ஸந்தேஹம் உங்களுக்கு இருக்க வேண்டியதில்லை என்று ஆழ்வார் சொன்னார்.

திருக்கடித்தானத்தின் சிறப்புகள் அறிய, நீங்கள் தொழாது இருந்தாலும், அத் திருப்பதியை நீங்கள் நினைத்தாலே, உங்கள் துக்கங்கள் எல்லாம் விலகும் எனப் பின் வருமாறு ஆழ்வார் சொன்னார்:

கொண்மின் இடர்கெட உள்ளத்துக் கோவிந்தன்,

மண்விண் முழுதும் அளந்த ஒண் தாமரை,

மண்ணவர் தாம் தொழ வானவர் தாம் வந்து,

நண்ணு திருக்கடித்தான நகரே.

திருக்கடித்தானம் என்ற கோவிந்தனின் திருவடித் தாமரைகள் புனிதமாக்கும் திருப்பதியை நினைத்த மாத்திரத்திலே, உங்கள் இடர்கள் எல்லாம் கெடும் என ஆழ்வார் அறிவித்தார். கடி என்பதற்கு புதுமை (நவீனம்), அழகு என்ற அர்த்தம் உண்டு. அழகின் ஸ்தானம், கடித்தானம் எனப் பெயர் பெற்றது. பழைய துக்கங்கள் விலகி, புது வாழ்வு அருளும் திருப்பதிக்கு திருக்கடித்தானம் என்பது தகுந்த பெயரே!

விண்ணவர்கள் கொண்டாடும் ஸ்ரீவைகுண்டம், பூமியில் பல திவ்ய தேசங்கள், ஜலராசிகளில் பாற்கடல் ஆகிய விசேஷ இருப்பிடங்கள் (தான நகர்கள்) இருக்க, அத்புத நாராயணன் என் நெஞ்சையும், திருக்கடித்தானத்தையும் தாயப்பதியாக ஏற்றுக் கொண்டான். தாயப்பதி என்பது முயற்சி ஏதும் இல்லாது தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் என்பதாக ஆகும். இப்படி விசேஷமாக அவன் நித்ய வாஸம் செய்யும் திருக்கடித்தானமும், என் நெஞ்சும், அத்புத





நாராயணனுக்கு தலை சிறந்த வாஸ ஸ்தலங்கள் என்று ஆழ்வார் சொன்னார். இப்படியாக, திருக்கடித்தானத்தையும், என் உள்ளத்தையும் விரும்பி வாழும் ஆயர் தலைவன், மிக்க ஆச்சர்யமான லீலைகள் புரியும் அத்புதனே என்றார். மற்ற திவ்ய தேசங்களை விட விசேஷமானதாகவும், தாயப்பதியாகவும் உள்ள திருக்கடித்தானம் அம்ருத நாராயணன் அபிமானித்து வாழும் இடம் என்று ஆழ்வார் சொன்னார்.

திருக்கடித்தானத்தில் அம்ருத ஸ்வரூபனாக நிற்கும் அற்புத நாராயணன் தன் நெஞ்சகத்தில் மேவியிருப்பதை மறுபடியும் கொண்டாடி, அந்த தாயப்பதியில், பெரும் புகழுடைய வேதவித்துக்கள், நான்கு வேதங்களை இடைவிடாது ஓதி வருகிறார்கள் என்று அடுத்த பாசுரத்தில் பின் வருமாறு சொன்னார்:

அற்புதன் நாராயணன் அரி வாமனன்,

நிற்பது மேவியிருப்தென் னெஞ்சகம்,

நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்,

கற்பகச் சோலைத் திருக்கடித்தானமே.

திருக்கடித்தானத்தை, விரும்புவதெல்லாம் அருளும் கற்பகப் பொழிலாக ஆழ்வார் இங்கு கொண்டாடினார். இங்கு அற்புத நாராயணன், ஹரி (அரி) என்ற திருநாமத்திற்கு தகுந்தவாறு, என் வினைகளையெல்லாம் அழித்து, என் நெஞ்சகத்தில் வாமன ப்ரஹ்ம்மசாரியாக நின்று வருகிறான் என்று நம்மாழ்வார் தெரிவித்தார்.

திருக்கடித்தானத்தையும், அங்கு நித்ய வாஸம் செய்யும் அத்புத நாராயணனையும் பற்றித் தான் அருளிய பாசுரங்களை அப்யஸிப்பவர்கள், வைகுந்தத்தை தவறாது அடைந்து நித்ய ஸூரிகளாவர் எனப் பின் வருமாறு சொன்னார்:

சோலைத் திருக்கடித்தானத்துறை திரு

மாலை, மதிள் குருகூர்ச் சடகோப சொல்,

பாலோடமுதன்ன ஆயிரத்திப்பத்தும்,

மேலை வைகுந்தத் திருத்தும் வியந்தே.

கற்பகச் சோலைகள் சூழ்ந்த திருக்கடித்தானத்திலே நித்ய வாஸம் புரியும் அத்புத நாராயணனைப் பற்றி திருக்குருகூரில் பிறந்த சடகோபனாகிய தான் அருளிய பாசுரங்களை ஓதுபவர்கள், ஸ்ரீவைகுண்டம் சேர்ந்து, அங்கே அந்த அத்புத நாராயணனுடைய ஸேவையால்





ஏற்படும் ஆனந்தானுபவத்தில் நிலைத்திருப்பார்கள் என ஆழ்வார் கூறி திருக்கடித்தான பாசுரங்களை தலைக் கட்டினார். ஆழ்வாரின் அருளிச் செயலை ஆராய்ந்தறிந்து, நாமும் பரமபத நாதனின் கைங்கர்ய ஸாம்ராஜ்யம் அடைவோமாக!

श्री घटि-स्थान क्षेत्रे श्री, भू तीर्थ पुष्करणी तटे पुण्यकोटी विमानच्छायायां स्थिताय पूर्वाभिमुखाय श्रीमते कल्पकवल्ली नायिका समेत श्री अमृत नारायण (अद्भुत नारायण) परब्रह्मणे नमः

SrI ghaTisthAna kshetre SrI bhU tIrtha pushkaraNI taTe puNyakoTI vimAnacChAyAyAm sthitAya pUrvAbhimukhAya SrImate kalpakavallI nAyikaa sameta SrI amrta nArAyaNa (adbhuta nArAyaNa) parabrahmaNe namaH

****

## Additional Reading Material:

1. Sthala Puranam from anudinam.org

